DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.96/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | குருமூர்த்தி | Age | : | 51 |
| F/N | : | சிவசித்தையா | Occupation | : | இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கம்), மதுரை |
| Village | : | | | | |
| District | : | மதுரை | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 15-th day of June 2023.

**15.06.2023**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுரை மாவட்ட கூட்டுறவு சங்கத்தில் இணைப்பதிவாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2003ம் ஆண்டு நான் இராமநாதபுரம் மாவட்ட டாஸ்மார்க் நிறுவனத்தின் மேலாளராக பணிபுரிந்தேன். அப்போது ஆஜர் எதிரி திருப்புல்லாணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளராக பணிபுரிந்தார். கடந்த 29.11.2003ம் தேதி இராமநாதபுரம் மாவட்டத்தில் மதுபானங்களை சில்லரை விற்பனையில் விற்க தொடங்கினார்கள். கிராமப்புற மதுபானகடைகளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் நடத்தி வந்தன. அந்த சங்கத்திற்கு எங்கள் டாஸ்மார்க் நிறுவனம் தான் மதுபானங்களை கொடுத்தது. கடந்த 04.12.2003ம் தேதி மாண்புமிகு உச்சநீதிமன்றம் கிராமப்புற மதுபான கடைகளையும், டாஸ்மார்க் நிறுவனமே நடத்த வேண்டும் என்று உத்தரவிட்ட அடிப்படையில் டாஸ்மார்க் நிறுவனம் மேற்படி கடைகளை தன்னுடைய பணியாளர்கள் மூலம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் 24.12.2003ம் தேதி வரை மேற்படி கடையை சங்கம் தான் நடத்தி வந்தது.

2. மதுபாட்டில்களை மீண்டும் டாஸ்மார்க் நிறுவனத்திற்கு திருப்புல்லாணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் நடத்தி வந்த இரண்டு கடைகளில் இருந்து ஒப்படைக்கும்போது எங்களிடம் மதுபானம் வாங்கியதற்கு குறைவான தொகையை ஒப்படைத்தார்கள். சங்கத்தின் செயலாளரான ஆஜர் எதிரி எங்களுக்கு ஒப்படைக்க வேண்டிய தொகையான ரூ.89,344/-ஐ ஒப்படைக்கவில்லை. இந்த முறைகேடு தொகையை கட்ட சொல்லி ஆஜர் எதிரியிடமும், அப்போதைய சங்கத்தின் தனி அலுவலர் திரு.நித்தியானந்தம் அவர்களிடமும், கூட்டுறவு துணைப்பதிவாளர் மற்றும் இணைப்பதிவாளர் அவர்களிடமும் கடிதம் அனுப்பினேன். அதன் பின்பு இராமநாதபுரம் மாவட்ட

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பணத்தை வசூல் செய்து தர சொல்லி புகார் மனு அளித்தேன். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u> இல்லை**

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**